1983 பிப்ரவரி 12]

சென்னையில் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு சிலை நிறுவும் திட்டம்.

*வினா எண் 246—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு சிலை வைக்க தமிழக அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து சென்னை நகருக்குள் வரும் வழியில் அமைந்துள்ள கத்திப்பாரா சந்திப்பு என்னுமிடத்தில் அமரர் நேருஜியின் சிலை ஒன்றினைச் சிறப்பான முறையில் நிறுவும் திட்டம் இப்போது செயலாக்குவதில் உள்ளது.

(முற்பகல் 9-10)

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சென்னையில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய சிலை வேறு எங்காவது இருக்கிறதா? இது முதன் முதலாக திறக்கப்படுகின்ற சிலையாக இருந்தால் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, பாரத ஜனாதிபதி ஆகியோர்களையும் அழைத்து இந்த விழா சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யப்படுமா? அதோடு நேரு அவர்களுடைய பொன்மொழிகளும் அந்த சிலைக்கு அடியில் பொறிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் வேறு இடத்திலே பண்டித ஜவஹர்லால் அவர்களுடைய சிலை இருப்பதாக அரசின் கவனத்திற்கு வரவில்லை. ஆகவே, இந்தச் சிலைதான் முதன் முறையாக அமைக்கப்படுகின்ற சிலை என்பதாலும் சென்னை மாநகரில் இருக்கின்ற ஒரே ஒரு சிலை என்பதாலும் குறிப்பாக தமிழ் நாட்டில் இருக்கிற ஒரு முக்கியமான சிலை என்பதாலும் சுமார் 10,50,000 ரூபாய் மதிப்பீட்டில் இந்த சிலையை அமைக்கின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தச் சிலையை அமைக்கின்ற இடத்தைச் சுற்றி ஒரு நல்ல அழகான பூங்காவும், அழகான புல் வெளியும் அமைக்கும் திட்டமும் இருக்கிறது. இந்தச் சிலை அமைப்பு முழுவதும் கல்லினால் வடிவமைக்கப்படுகிறது. பண்டித நேரு அவர்களுடைய பொன்மொழிகள் எல்லாம் இதிலே பொறிக்கப்படுகின்ற . திட்டம் ஏற்கனவே இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான் 10.5 லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிலை பீடம் சுமார் 20 அடி உயரமும், அதிலே 10 அடி உயரத்திற்குக் குறையாத சிலையும் அமைக்கப்பட இருக்கிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, பண்டித நேரு அவர்கள் ஒரு தலைசிறந்த ஜனநாயகவாதி. அவர்கள் நாடாளு மன்றத்திற்கு வரும்போது, அவர்கள் இந்த நாட்டினுடைய

பிரதமராக இருந்தாலும், கையிலே ஃபைல்ஸ் இல்லாமல் உள்ளே நுழையமாட்டார்கள் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அந்த வகையில் நேரு அவர்களுடைய சிலையை வைக்கும்போது அப்படி ஒரு ஃபைல் கையிலே இருக்கும் அளவுக்கு அந்த சிலை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, சிலை எப்படிப்பட்ட வடிவமைப்பிலே அமைய வேண்டுமென்பதுபற்றி ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்பட்டு, சிலை வடிக்கின்ற காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எப்படிப்பட்ட உருவ அமைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் இப்போது என்னிடம் இல்லை. ஆகவே, செய்துகொண்டிருக்கிற சிலை வடிவத்திலே இருந்து மாறுதல் செய்வது என்பது இயலாது என்று கருதுகிறேன். ஒரு வேளை இன்னும் தொடக்க நிலையில் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற கருத்தையும் பரிசிலித்து இப்படிப்பட்ட தோற்றப் பொலிவு அந்த சிலைக்கு நன்றாக அமையும் என்றால் அதுபற்றி அரசு பரிசிலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்; தலைவரவர்களே, உலகில் பெரும் ஜனநாயகவாதியாகவும் இந்தியப் பிரதமராகவும் இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு தமிழ்நாட்டில் முதன் முதலாக சென்னை மாநகரில் அமைக்கப்படுகின்ற ஒரு முக்கியமான சிலை இது என்று சொன்னார்கள். ஜவஹர்லால் நேரு அவர்கள் மொழி விஷயத்தில் இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் இந்த நாட்டின் பொதுமொழியாக நீடிக்கும் என்று உறுதி கொடுத்த வாசகம் இந்த சிலையின் அடியில் பொறிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் ; தலைவரவர்களே, பண்டித நேரு அவர்களுடைய உருவச்சிலையைப் பார்க்கும்போது எல்லோரும் அவர் மிகுந்த ஜனநாயகவாதி என்பதையும் அவர் எந்த எந்த தொண்டுகளை இந்த நாட்டுக்கு ஆற்றியிருக்கிறார் என்பதையும் அவர் தலைசிறந்த பல உறுதிமொழிகளை இந்தத் தமிழக மக்களுக்கு அளித்திருக்கிறார் என்பதையும் நிச்சயமாக நினைவுகூற முடியும். ஆனால் நிரந்தரமாக அமைக்கப்படும் ஒரு சிலைக்குக் கீழே ஒரு குறிப்பிட்ட கொள்கையை, அரசின் முடிவை தெரிவிக்கின்ற ஒரு கருத்தை பொறிக்க இயலுமா, அது சரியான தா என்பதைப்பற்றி பரிசிலிக்க வேண்டியிருக்கிறது, அவர்கள் என்றைக்கும் நிலைத்து நிற்கக்கூடிய பல கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை எல்லாம் பொறிக்க திட்டம் இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்து அவ்வளவு தகுந்த கருத்தா, பரிசீலனைக்கு உரியதா என்பதிலே எங்களுக்கு கொஞ்சம் தயக்கம் இருக்கிறது.

1983 பிப்ரவரி 12]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; நம்முடைய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய திருவுருவச் சிலையை வைப்பதற்கு அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை பாராட்டுவது என்னுடைய கடமை. அதற்காக நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அரசியல் வானிலே ஆசிய ஜோதியாக விளங்கிய நம்முடைய மதிப்பிற்குரிய பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களுடைய திருவுருவப் படத்தை இம்மாமன்றத்தில் வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிற கருத்து என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மறைந்த பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு சிலை வைக்க முடிவு செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மறைந்த நம்முடைய பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள், 1953 ஆம் ஆண்டு சென்னையிலே திராவிட முன்னேற்றக் கழகம் கார்ப்பொரேஷன் சார்பாக தலைவர் காமராசர் அவர்களுடைய சிலையைத் திறந்து வைத்தார்கள். அப்படி திறந்து வைக்கிறபோது தமிழகத்திலே இருக்கிற எல்லோரையும் அழைத்து மிகப் பெரிய அளவில் சிறப்பான விழாவாகக் கொண்டாடப்பட்டது. அதேபோல நம்முடைய மறைந்த பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைக்கிறபோது, அதை ஒரு பெரிய நிகழ்ச்சியாக தமிழகத்திலே இருக்கிற எல்லா மக்களும் கலந்துகொள்கிற நிகழ்ச்சியாக நடத்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய பண்டித நேரு அவர்களுக்கு முதன் முறையாக தலைநகரத்திலே சிலை வைக்கிற காரணத்தாலே அதை மிகப் பெரிய அளவிலே பொது மக்கள் எல்லோரும் அந்த விழாவில் கலந்துக் கொள்கிற நிகழ்ச்சியாக அமைக்க வேண்டும் என்ற எண்ணத்திலேதான் சென்ற நவம்பர் 14 ஆம் தேதி, நேரு அவர்களின் பிறந்த நாள் அன்று வைப்பதாக இருந்த திருவுருவச் சிலை திறப்பு விழாவை, இந்த ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் தேதிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, 1983 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் நாள், நேரு அவர்களின் பிறந்த நாள், குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிற திரு நாள் அன்று, சென்னையிலே தமிழக மக்களுடைய உணர்வுகளை, மறைந்த நமது மகத்தான தலைவருக்கு தெரிவிக்கின்ற வகையில், அரசு அந்த ஏற்பாடுகளை நடத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க வினா எண் 247 ஒத்திவைக்கப் பெறுகின்றது.